செ.வெ.எண்: 05/ஏப்ரல் நாள்: 04.04.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் உள்ளிட்ட தேர்தல் தளவாடப் பொருட்களை வாக்குச்சாவடி மையங்களுக்கு கொண்டு செல்வதற்கான வாகனங்கள் தயார்**

**மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் காவல்துறை ஆயுதப்படை மைதானத்தில் இன்று (04.04.2021) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள், தேர்தல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய் பொருட்களை மண்டலம் வாரியாக பிரித்து வாக்குச்சாவடி மையங்களுக்கு கொண்டு செல்வதற்காக தயார் நிலையில் உள்ள வாகனங்களை (Mobile Zonal Parties) பார்வையிட்டார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., அவர்கள் உடனிருந்தார்.

அதன்பின்பு, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்குப்பதிவு 06.04.2021 அன்று நடைபெற உள்ளது. அதன்படி வாக்குப்பதிவினை அமைதியான முறையில் நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் உள்ளன. தேர்தல் வாக்குப்பதிவிற்காக பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் கணினி முறையில் வாக்குச்சாவடி வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற தொகுதிகளில் தேர்வு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அதேபோல, அந்தந்த வாக்குச்சாவடி வாரியாக வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்துவதற்கான தேர்தல் தளவாட பொருட்கள் அனைத்தும் முறையே சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பணிகளுக்காக பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் 30, இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் 31, திருவாடானை சட்டமன்ற தொகுதியில் 34, முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 35 என மொத்தம் 130 மண்டல அளவிலான தேர்தல் பணி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழு அலுவலர்கள் தங்களது கட்டுப்பாட்டின் கீழுள்ள வாக்குச்சாவடி மையங்களில் கணினி முறை ஒதுக்கீட்டின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தேர்தல் தளவாட பொருட்களை வாகனத்தின் மூலம் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு நேரிடையாக கொண்டு சென்று சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களிடத்தில் பாதுகாப்பாக ஒப்படைப்பார்கள். இதற்காக காவல்துறையின் மூலம் ஒவ்வொரு மண்டல அளவிலான குழுவிற்கும் தலா 2 வாகனம் வீதம் ஏற்பாடு செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இவ்வாகனங்களின் நகர்வுகள் அனைத்தும் GPS கருவிகள் மூலம் கண்காணிக்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது, கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் திரு.எஸ்.லயோலா இக்னேசியஸ், திருஇஜெயசிங், வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சேக்முகமது உட்பட அரசு அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**